08.06.2026.

O.S.No. 63/2020

PW1– ராமராஜ் – த/பெ. ராமசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.06.2026.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>

1. 16.06.2010 தேதியில் பிராது 2ம் தபசில்சொத்தை வாதி கிரையம் பெற்றதற்கான சார்பதிவாளர் ஆவண நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 20.10.2017 பிராது தபசில்சொத்திற்கு வாதியின் பெயரில் உள்ள பட்டா இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 04.02.2011 ல் பிராது 2ம் தபசில்சொத்தை வாதியிடம் இருந்து, பிரதிவாதி எழுதி பெற்றுக்கொண்ட கிரைய ஆவணத்திற்கான சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 13.12.2010 தேதியில் பிராது 2ம் தபசில்சொத்தில் தெற்கோரம் 3 செண்ட் நிலத்தை வாதி கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 23.09.2020 தேதியில் பிராது தபசில் சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் கணினி வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 04.04.2022 உபயவாதிகள் மேற்படி தேதியில் பேசிக்கொண்ட ஆடியோ பதிவு Sandisk ultra USB 3.0 flash pendrive வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு பிரதிவாதி தரப்பில் கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனையில் அது உபயவாதிகள்

பேசிக்கொண்டதற்கான ஆடியோ இல்லை என்றும், வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை தீர்ப்பின் போது பரிசீலனை செய்யப்படும்)

(Arjun Panditrao khotkar vs kailash kushan rao என்ற மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்முடிவின் அடிப்படையில் 65(பி)சர்டிபிக்கேட்டானது வழக்கின் எந்த நிலையிலும் தாக்கல் செய்யமுடியும் என்பதால் வா.சா.ஆ.6 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் 65(பி) சர்டிபிக்கேட் தாக்கல் செய்தால் மட்டுமே வழக்கின் இறுதிவிசாரணையின் போது ஏற்றுக்கொள்ளப்படும்)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**